# யாழ்ப்பாணத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள்

செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
தமிழ்த்துறை,கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
mssivasubramaniam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

யாழ்ப்பாணத்தில் அண்மையில் பல கல்வெட்டுக்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அவற்றைப் படியெடுத்தும் படமெடுத்தும் வாசிக்கும் முயற்சியின் விளைவால் பல தகவல்களைப் பெறமுடிந்தது. இக்கல்வெட்டுக்களால் பல பண்பாட்டு அம்சங்களைப் பெறமுடிந்தது. தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களில் இருந்து யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள் சில தனித்துவமான பண்புகளைக் கொண்டிருப்பதைக் காணலாம். கொடித்தம்ப சாசனம், பெருச்சாளி வாகனச் சாசனம், அடுக்குத் தீபச்சாசனம், தெரு மூடிமடச்சாசனம், தீர்த்தக்கேணிச் சாசனம், சங்கிலியன் தோப்புச் சாசனம் எனப் பலவகைப்பட்ட சாசனங்கள் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. அவற்றினூடாக வெளிவரும் தமிழ்ப்பண்பாட்டு மரபுகளை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமையும்.

## 1. ஆய்வு அறிமுகம்

பல தசாப்தங்களாக யாழ்ப்பாணத்தில் போரினால் பல கோயில்களும் கட்டடங்களும் சேதங்களுக்கு உள்ளாகின. தற்பொழுது கோயில்களின் கட்டடங்கள் மீள் உருவாக்கம் செய்யப்படும் பொழுது பல கல்வெட்டுக்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இக் கல்வெட்டுக்களை, வாகனக் கல்வெட்டு, மணிச்சாசனம், விளக்குச்சாசனம் மண்டபச்சாசனம், கோயிற்தூண் சாசனம் எனப் பாகுபடுத்தி நோக்கலாம். யாழ்ப்பாணத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட மேற்படி கல்வெட்டுக்கள் உணர்த்தும் தமிழ்ப் பண்பாட்டு மரபுகளை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

இந்திய வம்சாவழியினருடைய படையெடுப்பு ஈழத்தில் பண்பாட்டுப் பின்புலத்தில் பெரும் மாற்றங்களை உருவாக்கியது. திருத்தலங்களுக்கு தல யாத்திரை செய்வதில் ஈடுபட்டனர். ஆலயங்களை முகாமைத்துவம் செய்வதற்கும் ஆலயக் கட்டடங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும் வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்கும் உதவிகள் புரிந்தனர். சைவாலயப் பண்பாட்டு மரபுகளில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. வழிபாட்டு மரபிலும், தல யாத்திரைகளிலும் நேர்த்திக்கடன் செய்வதிலும் பலர் ஈடுபட்டனர். இந்தப் பின்புலம் யாழ்ப்பாணத்திலும் மறுமலர்ச்சியை உண்டுபண்ணியது, நன்கொடை செய்யும் மரபு உருவாகியது.

நன்கொடை வழங்கும் பொருட்களாக விளக்கு, மணிகள், தட்டங்கள், வாகனங்கள் என்பன அமைகின்றன. நன்கொடை செய்தவர்களின் விபரங்கள் பொறிக்கப்பட்டுள்ளதை இந்திய சாசனங்களில் காணலாம். அந்த மரபினை இலங்கையிலும் பல பாகங்களிலும் காண முடியும். யாழ்ப்பாணத்திலும் இத்தகைய பண்பாட்டு மரபு பேணப்பட்டு வருகின்றது.

## 2 மணிச்சாசனம்

### உபயம்

விளக்கு மணிகள் என்பன சமயப் பண்பாட்டுச் சின்னங்களாகும். ஒளியை விளங்கச்செய்வது விளக்கு. மணி செய்தியைச் சொல்வதற்குப் பயன்பட்டதை வரலாறு காட்டும். மணி பலவகையில் பயன்படுகின்றது. அழகிற்காக மாடுகளுக்கு அணியப்படுகின்றது. ஓசை கருதி மாடுகளுக்கு அணியப்படுகின்றது. அபாயச் செய்திகளை மன்னனுக்குத் தெரியப்படுத்துவதற்கும் மணி பயன்பட்டுள்ளது. மனுச்சோழனின் புராணக்கதை மூலம் இதனைக் கண்டுகொள்ளலாம். ஆலயங்களில் பூசைநேரம் பயன்படுத்துவதற்கு ஆலயமணிகள் விளங்குகின்றன. மருதடிப்பிள்ளையார் கோவில் மணியிலும், இணுவில் காரைக்காட்டு விஸ்வநாதர் கோவில் மணியிலும் சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

“உ இஃது யாழ்ப்பாணம் மருதடிப்பிள்ளையாருக்கு அ. ஆசைப்பிள்ளையினது உபயம் 1874”[1]

“மண்டைதீவு திருவெண்காட்டு சித்திவிநாயகருக்கு(ம்) முத்துத்தம்பியார் மகள் செங்கமலம் உபயம். மணி செய்தவர் S.A.AN(d) Sons 1908”[1].

1874ஆம் ஆண்டிலே ஆசைப்பிள்ளை என்பவர் நன்கொடையாக மருதடிப்பிள்ளையார் கோவிலுக்குக் கொடுத்தார். அவர் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலேயே குதிரைவண்டிப் போக்குவரத்துச் சேவை யினைச் செய்தவர். குதிரைவண்டிப் பயணம் இருந்த தையும் அறியமுடிகின்றது.

இரண்டாவது மணி இணுவில் விஸ்வநாதர் சிவன் கோவிலில் பயன்படும் மணி. அது மண்டைதீவிலிருந்து எடுத்துவரப்பட்டது. அதை முத்துத்தம்பியின் மகள் செங்க மலம் சித்திவிநாயகர் கோவிலுக்கு நன்கொடையாக வழங்கினாா். இது 1909ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மண்டைதீவிலிருந்து காரைக்காட்டுச் சிவன்கோவிலுக்கு எடுத்துவரப்பட்டது.

### 3. கொடித்தம்ப சாசனம்

#### உபயம்

பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் தொன்மையான வரலாற்றை உடையது. பரராஜசேகர மன்னனின் பெயரைத் தாங்கி இக்கோயில் அமைந்துள்ளமை வரலாற்றுச் சிறப்புடையதாகும். பரராஜசேகரன் இக் கோயில் கட்டுவதற்கு உதவிசெய்திருக்க வேண்டும் என்பதையும் பரராஜசேகரன் இக்கோவிலில் வந்து வழிபட்ட செய்தியையும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இக் கோவிலுக்குப் பலதானங்கள் செய்யப் பட்டதைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலில் கொடித்தம்ப கவசம் செப்புத் தகட்டால் அமைந்துள்ளது. அதில்வரும் சாசனப்பகுதி பின்வருமாறு அமைகின்றது.




யாழ்ப்பாணத்தில் சாசனங்களை எழுதும்பொழுது சமயக்குறியீடுகள் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

சைவசமயத்தவர்கள் ஆயினும் கிறிஸ்தவர்களாயினும் தமது சமயக் குறியீடுகளை இடுவதைச் சாசனங்களில் அவதானிக்கலாம். சைவ சமயத்தவர்கள் எந்தக் காரியங் களைத் தொடங்கினாலும் பிள்ளையாரைத் துதித்து விட்டுத் தான் தொடங்குவர். அதேபோன்று சாசனங்களை எழுதும்பொழுதும் பிள்ளையார் சுழி போடுவதைக் காண லாம்.

பரராஜசேகரப்பிள்ளையார் கொடித்தம்ப கல்வெட்டு பிள்ளையார் சுழியோடு ஆரம்பமாகின்றது. தம்பிளா வத்தைக் காணியில் எழுந்தருளியிருக்கும் பரராஜசேகரப் பிள்ளையாருக்கு மெஷகுடி காலிங்கர் இராமநாதரால் கொடித்தம்பம் உபயமாகக் கொடுக்கப்பட்டது.

இதைப் பராமரிப்புச் செய்தவர் இணுவிலைச் சேர்ந்த மயிலர் ஆறுமுகம். அதன் ஆண்டு 1874 எனக் கூறப் பட்டுள்ளது. கொடித்தம்பத்தை உபயமாகக் கொடுக்கின்ற வழக்கம் பின்பற்றப்பட்டு அதனைப் பராமரிப்பதற்கும் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதை இக் கல்வெட்டு வாயிலாக அறியமுடிகிறது.

கோயிலுக்குத் தானமாகப் பொருட்களைக் கொடுக்கும் மரபு தொன்மையானது.

### 4. பெருச்சாளி வாகனச் சாசனம்

#### உபயம்

பிள்ளையார் வீதி வலம்வரும் வாகனங்கள் பரராஜ சேகரப்பிள்ளையார் கோவிலில் பல காணப்படுகின்றன. பெருச்சாளி வாகனம் மிகவும் பழைமை வாய்ந்தது, பெருச் சாளி என்பது எலி வாகனம் என்பதாகும்.




இச்சாசனத்தில் 1867ஆம் ஆண்டு பரராஜ சேகரப் பிள்ளையாருக்கு பெருச்சாளி வாகனத்தை (எலிவாகனம்) உபயமாக க.கணபதிப்பிள்ளையும் பெண் சிதம்பரமும் கொடுத்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவும் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட தானத்தைக் குறிப்பிடுகின்றது. தானம் செய்வது உபயம் செய்வது என்பன தமிழரின் பண்பாட்டு மரபாகும்.

**5. அடுக்குத்தீபச் சாசனம்**

**உபயம்**

பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் அடுக்குத் தீபத்திலும் எழுத்துருக்கள் காணப்படுகின்றன.




"பிள்ளையார் கோவிலுக்கு உபயம்

லெச்சுமமண செட்டியா சூ அ அ அ ஹ

ஐப்பசி மீ உ யாழ்ப்பாண

வெம்படியும்"

யாழ்ப்பாணத்தில் உள்ள வேம்படி என்னும் ஊரில் வசிக்கும் லச்சுமண செட்டியார் அடுக்குத் தீபத்தை பிள்ளையார் கோவிலுக்கு உபயமாக 1888ஆம் ஆண்டு கொடுத்தார். வேம்படியில் வாழும் லச்சுமண செட்டியார் அடுக்குத் தீபத்தை பரராஜசேகரப் பிள்ளையாருக்குக் கொடுத்தாரா என்ற வினா எழுந்தது.

இங்கு பிள்ளையார் கோவிலுக்கு என எழுதப்பட்டுள்ளது. தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சைவசோமஸ் கந்தக்குருக்கள் அடுக்குத்தீபம் பற்றி வாய்மொழியாகக் கூறும்பொழுது "வேறு கோவிலிலிருந்த பரராஜசேகரப் பிள்ளையாருக்கு இத்தீபம் எடுத்துவரப்பட்டது" எனக் கூறினார். வெம்படியும் என்பதில் வேம்படி என திருத்தப்பட வேண்டும். செட்டியர் என்பதற்கு குற்று இடப்படவில்லை. இவை எழுத்துப் பிழையாக இருக்கலாம்.

பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலில் காணப்படும். சாசனங்களின் வரிவடிவங்கள் முழுமையான வளர்ச்சி நிலையிற் காணப்படுகின்றன. இவை பிற்காலத்தில் எழுதப்பட்டுள்ளன எனத் தெரிகின்றது. இப்பொழுது வழக்கில் உள்ள எண்கணக்குமுறை இச்சாசனங்களிற் பயிலப் படவில்லை. தமிழ்மரபின் வழிவந்த குறியீடான தமிழ் எழுத்துக்களே பயன்பட்டுள்ளன. பண்டைய தமிழ்மரபு இச்சாசனங்களில் பேணப்படுவதை நோக்கலாம். சில எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் பல்லவர் காலத்திலும் சோழர்காலத்திலும் விளக்குத் தானம் கொடுப்பதை இங்கு ஒப்பிட்டு நோக்கலாம்.

**6. தெருமூடி மடச் சாசனம்**

பருத்தித்துறையில் தெருமூடி மண்டபம் அமைந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் வேறு எங்கும் தெருமூடி மண்டபத்தினைக் காணமுடியாது. தெருமூடி மண்டபத்தில் எட்டுத் தூண்கள் காணப்படுகின்றன. எட்டுத் தூண்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. எட்டுத்தூண்களையும் பல ஊர்மக்கள் உதவிசெய்து கட்டுவித்தனர்

"ஸ்ரீ.மு.சுப்பிரமணியம்"

(தெருமூடி மடம் இ 1)

"உடுப்பிட்டி மணியம் சிவசிதம்பரம்"

(தெருமூடி மடம் இ 5)

"சித்தங்கேணி ஸ்ரீ கா.வைத்தியலிங்கம்"

(தெருமூடி மடம் இ 3)

"அல்வாய் ஸ்ரீ செ.ராமலிங்ககுரு"

(தெருமூடி மடம் இ 6)

"ஸ்ரீ க.மயில்வாகனம் இருபாலை"

(தெருமூடி மடம் இ 4)

தெருமூடி மடத்தினைக் கட்டுவதற்கும் தூண்களை அமைத்ததற்கும் இருபாலை, அல்வாய் சித்தங்கேணி உடுப்பிட்டி என்ற ஊர்களில் வசிக்கும் பிரமுகர்கள் உபயம் செய்தனர் என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. அவ்வூர் மக்களின் நினைவாக இத்தூண்கள் அமைந்துள்ளன. தெருமூடி மடத்தில் நீண்டதூரம் பிரயாணம் செய்பவர்கள் தங்கியிருந்து இளைப்பாறிச் செல்வது வழக்கம், வெய்யில், மழைக்கு பாதுகாப்பான இடமாக தெருமூடிமடம் அமைகின்றது.

**7. தீர்த்தக்கேணிச் சாசனம்**

**உபயம்**

அளவெட்டி அழகொல்லை விநாயகர் கோவிலில் தீர்த்தக் கேணியில் ஒரு கல்வெட்டுக் காணப்படுகின்றது. அதுவும் பிள்ளையார் சுழியோடு தொடங்குகின்றது.

"சூ அ சூ உ

பங்குனி மாதம் 4ம் திகதி

தாமோதரம்பிள்ளை இந்தக் கேணியைக் கட்டுவித்தது"

1892ம் ஆண்டு பங்குனிமாதம் நாலாம் திகதி தாமோதரம்பிள்ளை அவர்கள் இந்தக் கேணியைக் கட்டுவித்தார் எனக் கூறப்பட்டுள்ளது. தமிழ் எழுத்திலேதான் ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

வழிபாட்டுத் தலத்துக்கு செல்வதற்கு முன்னர் கால்களைக் கழுவிச் செல்வது வழக்கம். கழுவிச் செல்கின்ற மரபு இந்துப் பண்பாட்டுக்குரியது. இதை நிறைவேற்றும் வகையில் தாமோதரம்பிள்ளை இந்தக் கேணியை உபயமாகக் கொடுத்ததை கல்வெட்டுக் காட்டுகின்றது. இதனூடாக பண்பாட்டு மரபு பேணப்படுகின்றது.

**8. சங்கிலியன் தோப்புச் சாசனங்கள்**

இலங்கையில் வேறெங்கும் கிடைக்காத அறவுரைகள் அடங்கிய கல்வெட்டுக்கள் சங்கிலியன் தோப்பில் காணப்படுகின்றன. யாழ்ப்பாண நகரிலிருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் சங்கிலித்தோப்பு அமைந்துள்ளது. அங்கு முற்காலத்தில் சங்கிலி அரசனின் அரண்மனை அமைந்திருந்ததென்று கருதப்படுகின்றது. "சிங்கையாரியன் என்ற பட்டப்பெயரைக் கொண்டிருந்த யாழ்ப்பாண அரசர்கள் நல்லூரில் இராசதானி அமைத்து அங்கிருந்து ஆட்சி செய்தனரென்று கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன". [2], [3]

கி.பி 1619ஆம் ஆண்டளவில் நல்லூர் இராசதானி வீழ்ச்சியடைந்தது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிவிட்டார்கள். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் நல்லூரை ஒரு பிரதான நிர்வாக நிலையமாகப் பயன்படுத்தினார்கள். முன்பிருந்த சமய பண்பாட்டுச் சூழல் முற்றாக மாறிவிட்டது. அரண்மனையின் அடையாளங்களும் மாற்றமுற்றன. அவ்விடத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களின் எழுச்சி ஏற்பட்டது. ஐரோப்பிய கலாசாரத்தின் மேலாதிக்கம் பின்புலத்தாக்கம் ஏற்பட்டிருந்ததை அவதானிக்கலாம்.

நல்லூரிலே ஒரு பழைய கட்டடம் அமைந்திருக்கின்றது. இதனைச் சங்கிலியன் தோப்பு என்றும் சங்கிலியன் கோட்டை என்றும் அழைப்பர். இதன் சுற்றாடலில் மந்திரிமனை என்றொரு பகுதியும் காணப்படுகின்றது. பழைய கட்டடமாக சிதைவுற்றுக் காணப்படுகின்றன. சங்கிலியன் கோட்டையில் ஐந்து தமிழ்ச்சாசனங்களை அடையாளம் காணமுடிந்தது. அவற்றில் ஒன்று 18ஆம் நூற்றாண்டுக்குரியது, ஏனையவை 19ஆம் நூற்றாண்டுக்குரியவை அண்மையில் பல கல்வெட்டுக்களை அடையாளம் காணமுடிந்தது.

**அறிவுரைகள்**

இங்கு காணப்படும் கல்வெட்டுக்கள் நான்கு வெவ்வேறான விடயங்களைப் பற்றியவை. இவற்றிலே காலத்தால் முற்பட்டது. (1783) பூமிதானம் பற்றியது. அது ஒன்று மட்டுமே ஒல்லாந்தர் காலத்திற்குரியது. ஏனைய நான்கும் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்திற்குரியன. அவற்றில் ஒன்று நீதியுரை போன்ற வாசகத்தைக் கொண்டுள்ளது.



"சற்றே சிந்தித்து மனதைத் திருப்பி
நீதியாயாய் நட உனக்கும்
உன் சந்ததிக்கும்
யாதொரு குறைவில்லை
சகல ஆசீர்வாதமும்
உண்டாகும். பொல்லாங்கு
செய்பவை எல்லாந்தவிர்
உன்னைப்போலே
பிறரை நேசி சுபமஸ்து"
(சங்கிலியன் கோட்டை கல்வெட்டு
நல்லூர்

இது தனிச்சிறப்புடையது. இது ஒன்பது வரிகளில் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் வாசகம் முழுவதும் அறவுரைபோல அமைந்துள்ளது. இதன் தொடக்கத்திலே "ஸ்வஸ்தி ஸ்ரீ" போன்ற மங்கல மொழி எதுவும் காணப்படவில்லை. "ஸ்வஸ்தி ஸ்ரீ" என்ற தொடரை ஆரம்ப மொழியாகக் கருதி சாசனங்களை எழுதும் முறை வழக்கொழிந்துள்ளன. இதற்குப் பதிலாக யாழ்ப்பாணத்திலே சைவர்கள் உ என பிள்ளையார் சுழிபோட்டுத் தொடங்குவதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. இச்சாசனத்திற் பிள்ளையார் சுழி எழுதப்படவில்லை. அதனால் அது கிறிஸ்தவ தொடர்புடையதாக இருக்கலாம்.

நல்வழி, மூதுரை போன்றவற்றிலுள்ள அறவுரைகளின் சாரம்போல இக்கல்வெட்டின் வாசகம் அமைந்துள்ளது. புலனடக்கம், நீதி ஆகியன ஒருவரின் முன்னேற்றத்திற்கும் மறுபிறப்பிற்கும் அவசியமானவை என வலியுறுத்தப்படுகின்றது. பிறருக்கு பொல்லாங்கு செய்வதைத் தடுத்து ஒருவர் தன்னைப்போலப் பிறரையும்

நேசிக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகின்றது. வாழ்வியல் சிந்தனையை நோக்கும்பொழுது சைவசமய சிந்தனைகளும் கிறிஸ்தவ சமய சிந்தனைகளும் ஒன்றாக இணைந்தமையினை இக்கல்வெட்டின் வாசகம் உணர்த்துகின்றது.

அறவுரையினை மட்டும் வாசகமாகக் கொண்ட வேறெந்தக் கல்வெட்டும் இலங்கையில் இதுவரை கிடைக்கவில்லை.

**கட்டுமானம் பற்றிய விபரம்**

மற்றைய கல்வெட்டு கட்டுமானம் பற்றிய விபரத்தைத் தருகின்றது. அது கட்டடத்தின் பெயரையும் கட்டுவித்தவரின் பெயரையும் குறிப்பிடுகின்றது.



"திரு ஓலக்கவாயில்
ஶ்ரீமத் அம்பலவாண (பிள்ளை)
சீனிவாசகம் (பிள்ளை) தம்பையா
பிள்ளை திறி ஓலக்கவாயில்
த.சிவப்பிரகாசபிள்ளை
கட்டிடம்"

இது சங்கிலித் தோப்பிலுள்ள தொன்மையான கட்டடத்திலுள்ள கல்வெட்டு ஒன்றின் வாசகம். இதிலே நான்கு தலைமுறையினரின் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல கருதமுடிகின்றது. கட்டடம் ஓலக்கவாயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஓலக்கம், திருவோலக்கம் என்பன மொழிவழக்கில் பெரிதும் பயன்படுவதில்லை. கல்வெட்டுச் சொல்லகராதிகளில் அவற்றைப் பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன.

இச்சொற்கள் சாசனங்களில் அரசர்கள் பற்றியும் கோவில்களில் நடைபெறும் மகோற்சவங்கள் பற்றியும் கூறுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஓலக்க மண்டபம், திருவோலக்கம் செய்வது போன்ற தொடர்கள் சாசனங்களில் உள்ளன. அலங்காரமான தோற்றமுடையதும் மன்னன், இறைவன் கொலுவீற்றிருந்து காட்சியளிக்கும் மண்டபம் (திரு) ஓலக்க மண்டபம். ஆனால் சங்கிலியன் தோப்பிலுள்ள சாசனம் குறிப்பிடும் ஓலக்கமண்டபம். பதவியிலிருந்த பிரதானிகள் குடும்பமொன்றுக்குச் சொந்தமான மாளிகையொன்றின் வாயிற்புற மண்டபம் அலங்காரக் கோலத்தில் அமைக்கப்பட்ட மண்டபம். அது ஒரு பெருங்கட்டுமானத்தின் ஓரம்சமானது போலத் தெரிகின்றது. அதன் மற்றையப் பகுதிகள் போராட்ட சூழல்களினால் அழிந்து உள்ளன. அதன் பக்கத்தில் உள்ள கட்டடத்தின் வாயிலில் மந்திரிமனை என்று மக்கள் பெயரிட்டுள்ளமை ஆய்விற்குரியது.

சங்கிலித்தோப்பு ஐரோப்பியரின் ஆட்சியில் மந்திரி ஒருவனுக்குரிய கடமைகளைப் புரிந்த ஒருவரின் வழி வந்தோரின் கட்டுமானம் எனலாம். ஓலக்கவாயில் என்ற பெயர் திரு என்னும் அடைமொழியினைப் பெற்றிருக்கின்றதால் இக்கட்டடம் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஒருவர் கொலுவீற்றிருந்த வாயிற்புற கட்டுமானம் எனக் கொள்ள இடமுண்டாகின்றது. சாசனக் குறிப்புகளின் அடிப்படையில் இதுவரை கவனித்தவற்றின் மூலம் திரு ஓலக்க வாயில் என்பது சங்கிலித் தோப்பிலுள்ள பழமையான கட்டடத்தின் ஒரு பெயரென்பதும் அது ஒரு குடும்பத்தவருக்கு உரிமையானது என்பதும் வெளியாகின்றன.

இதிலே தலைமுறையினரின் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. அம்பலவாணபிள்ளை, சீனிவாசகம்பிள்ளை, தம்பையாப்பிள்ளை, சிவப்பிரகாசம் பிள்ளை கட்டடம் எனக் கூறப்பட்டுள்ளது. சங்கிலித்தோப்பிலுள்ள கட்டடம் பற்றிய புரிந்துணர்வில் ஒரு பெரும் மாற்றம் ஏற்படுகின்றது. நிலத்திற்குரிய உறுதிகளையும் அவை பதிவாகியுள்ள தோம்புகளையும் ஆராய்வதன் மூலம் கட்டடம் பற்றியும் சில புதிய விபரங்கள் வெளிவரும். கட்டடத்தின் பெயரையும் கட்டுவித்தவரின் பெயரையும் குறிப்பிடுகின்றது.

இதைப்போன்ற வேறொரு கல்வெட்டு இலங்கைத் தமிழ்ச் சாசனங்களிற் காணப்படவில்லை. கோயில் கட்டடத் திருப்பணிகள் பற்றிய விபரங்களைக் கொண்ட பல கல்வெட்டுக்கள் உள்ளன. ஆனால் தனியாருக்குச் சொந்தமான மாளிகை ஒன்றினைப் பற்றிய விபரங்கள் இலங்கையிலுள்ள வேறெந்தத் தமிழ்க் கல்வெட்டுக்களிலும் காணப்படவில்லை.

**மரணம் பற்றிய செய்தி**

இருகல்வெட்டுக்கள் மரணம் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன. யாழ்ப்பாணத்தில் மரணம் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும் தமிழ்க் கல்வெட்டுக்கள் சங்கிலித்

தோப்பிலேதான் முதன் முதலாகக் கிடைத்துள்ளன. அவை திருஓலக்கவாயிலின் உரிமையாளர் இருவரின் மறைவு பற்றியன.

1. "ஸ்ரீமத்.அ.சீ.தம்பையா பி(ள்ளை)
2. ஜன்மம் கலியப்தம்
3. 4914 தை மா (தம்) 23ம் தி (கதி)
4. மணம் சின்னாச்சிப் பி (ள்ளை) முத்தி 4969 புரட்டாதி 17 தி (கதி) குருவார உத்திரட்டாதிப் பூரணை".

அவர்களில் ஒருவர் அம்பலவாணபிள்ளை, சீனிவாசகம் பிள்ளை தம்பையாப்பிள்ளை மற்றவர் அன்னாரின் மகன் த.சிவப்பிரகாசம்பிள்ளை. இங்கு அம்பலவாணபிள்ளை, சீனிவாசகம்பிள்ளை என்பன தம்பையாப்பிள்ளையின் முதலெழுத்துக்கள் என்பதாகும். இதனால் பரம்பரை வெளி யாகின்றது. ஸ்ரீமன் அ.சீ தம்பையாப்பிள்ளை கலியுக வருஷம் 4916 தைமாதம் 23ம் திகதி பிறந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. அவர் சின்னாச்சிப்பிள்ளை என்னும் பெண்ணை மணம் புரிந்தவர். அவர்கலியாப்தம் 4969 புரட்டாதி 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை முத்தி அடைந்தார். அது உத்தரட்டாதி நட்சத்திரமும் பௌர்ணமியுங்கூடிய தினம் கலியாண்டு என்று இருந்தால் ஆங்கில ஆண்டினைப் பெறுவதற்கு கலியாண்டு – 3101 இனைக் கழிக்கும் பொழுது வரும் ஆண்டு என்பதாகும். மேலே குறிப்பிட்ட விபரங்களின்படி அவரின் ஆயுட்காலம் (கி.கி 1813 – 1868) 55 ஆண்டுகளாகும்.

மரணசங்கதி பற்றிய இரண்டாவது கல்வெட்டு நிறைவு பெறாத வாசகத்தைக் கொண்டது. பிறந்த காலம் பற்றிய விபரங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆனால் இறந்த தினம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

"ஸ்ரீமத் அ.சீ.த.சிவப்பிரகாசம்பி (ள்ளை)
ஜென்மம் கலியப்தம் 4940
புரட்டாதி மா(தம்) 14 தி(கதி)
இரவு உச்சி
சா அடி சுக்கிரவாத உத்திராடம்
விஜயதசமி மணம்
சிவக்கொழுந்தம்மா
தேகாந்தம்"

மேல்வரும் சாசனத்தில் கலியப்தம் என வந்துள்ளது. ஆங்கில ஆண்டினைப் பெறுவதற்கு 3101 என்ற எண்ணினைக் கழிக்கும்பொழுது பெறப்படும்.

ஸ்ரீமத்.அ.சீ.த சிவப்பிரகாசம் (கி.பி.1841) ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ஆம் திகதி பிறந்தமை பற்றி அறிய முடிகின்றது.

தேகாந்தம் என்ற சொல் காணப்படுகின்றது. ஆனால் காலநேரம் பற்றிய குறிப்பெதுவும் இல்லை. இறந்தவரின் மனைவியார் சிவக்கொழுந்தம்மா இச்சாசனம் எழுதப்பட்ட காலத்திற் கடிகாரங்கள் அதிகம் வழக்கத்தில் வரவில்லை. சிவப்பிரகாசம் பிறந்த நேரத்தைப் பழைய மரபு வழியான கணிப்பு முறையில் இரவு உச்சி சா அடி எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இரவு உச்சி என்பது இராக்காலத்தில் சந்திரன் உச்சியில் நிற்கும்பொழுது ஒருவரின் நிழல் ஆறடியாக இருப்பதைக் குறிக்கும். வாரம், நட்சத்திரம் திதி என்பன சொல்லப்படுவதால் அக்காலத்தவர்களுக்கு நேரத்தை அறிந்துகொள்ள முடியும். ஸ்ரீமான் அ.சீ.த.சிவப்பிரகாசம்பிள்ளை கி.பி.1841ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ம் திகதி பிறந்தவர் என்பதைக் கல்வெட்டின் மூலம் அறியமுடிகின்றது.

## பூமிதானம்

பூமிதானம் பற்றிய கல்வெட்டு 18ம் நூற்றாண்டிற்குரியது.

"1783 தை மா(தம்) 1தி(கதி)
யோசே ஶ்ரீவாரா
சுவாமியவர்கள்
பூமிதானம் (கொடுக்க)ப்பட்ட இடம்"

ஆறு வரிகளைக் கொண்ட கல்வெட்டு முதலாவது வரியில் ஆண்டு 1783 என்பது எண்களைக் குறிக்கும் தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. 1783 என்ற எண்களை கிறிஸ்தவ வருஷத்திலுள்ள ஆண்டாகக் கொள்ளலாம்.

வாசகமும் கிறிஸ்தவ சமயத் தொடர்புடையது மூன்றாம் வரியில் யோசே ஸ்ரீவாரா என்ற பெயர் காணப்படுகின்றது. அப்பெயரைத் தொடர்ந்து சுவாமியவர்களின் பூமிதானம் என்று வருவதால் அது ஒரு ஐரோப்பியரான கிறிஸ்தவ சமய குருவின் பெயராக இருக்க வேண்டும்.

திருச்சபையைச் சேர்ந்த சமயகுருவாதல் வேண்டும். அவருக்குப் பூமிதானமாக வழங்கப்பட்ட நிலத்தில் இக்கல் அடையாளமாக நாட்டப் பெற்றுள்ளதை அறிந்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் அருங்காட்சியகத்தில் இராஜேந்திரன் காலத்திலான ஊர்காவற்றுறை கல்வெட்டு இரண்டு காணப்படுகின்றது. அதனை நேரில் பார்க்கும் வாய்ப்புக்

கிடைத்தது. அதுபற்றி பேராசிரியர். சி.பத்மநாதன் விரிவாக எழுதியுள்ளார். "மாதோட்டத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குக் கொண்டுவரப்பட்டதால் இதனை மாதோட்டம் - ஊர்காவற்றுறைக் கல்வெட்டு எனக்கூறுவார். இக்கல்வெட்டுக்கள் இரண்டும் ஜயங்கொண்ட சோழமூவேந்த வேளானின் ஆவணங்கள் என்பதில் ஐயமில்லை. அவன் அதிகாரத் தண்டநாயகன் என்னும் பதவியினைப் பெற்றிருந்தான் எனக் கூறுகின்றார். இலங்கையில் வெற்றிபெற்றுத் திரும்பிய சோழமூவேந்த வேளான் இலங்கைக்கு மண்டலாதிபதியாக முடிசூடப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டான் எனக் கூறப்படுகிறது"[1]. ஈழத்தில் நடைபெற்ற சோழர் ஆட்சியினை இதனூடாக அறிய முடிகின்றது. இவ்விரு சாசனங்களும் மெய்க்கீர்த்தி வடிவில் அமைந்துள்ளன. மெய்க்கீர்த்தி என்பது அரசனுடைய புகழ் பேசுவது. பன்னிரு பாட்டியல் 96 வகை பிரபந்தங்களுள் ஒன்றாக மெய்க்கீர்த்தியைக் குறிப் பிடும். இவ்விரு சாசனங்களினூடாக அரசியல் மாற்றம் இலங்கையில் நடைபெற்றதை அறியமுடிகிறது.

ராஜாதிராஜ திரிபுவனச்சக்கரவர்த்தி என்ற பட்டப் பெயர்கள் அரசர்களுக்கு இடப்பட்டுள்ளன. இலங்கையிலும் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்திலிருந்து அரசனைச் திரிபுவனச்சக்கரவர்த்தி என அழைத்தனர். பரராஜசேகரன் என்ற பெயரும் யாழ்ப்பாணத்து அரசர்களின் பரம்பரையாக வந்த பெயராகும்.

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் செட்டிக்குளம் பற்றிய பிராமிச் சாசனம் பற்றிக் கூறும்பொழுது கந்தரோடையின் பண்பாட்டு மரபுபற்றிக் கூறுகின்ற விடயம் இங்கு குறிப்பிடத்தக்கது. "மக்கள் தமிழகத்திலிருந்து கந்தரோடைக்குப் புலம்பெயர்ந்திருக்கலாம் அல்லது இங்கு வாழ்ந்த மக்கள் தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கலாம் எனக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் பெருங்கற்காலப் பண்பாட்டினை உடைய சங்க இலக்கியங்களில் ஈமச்சின்ன வழிபாடு நடை பெற்றிருக்கின்றது. சங்க இலக்கியங்களில் நடுகல் வழிபாடு கற்பதுக்கை தாழிவழிபாடு என்பன இடம்பெற்றதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன" [4] பெருங்கற்காலப் பண்பாடு கந்தரோடையிலும் நடைபெற்றதைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் எடுத்துக்காட்டுவார்.

பேராசிரியர்.செ.கிஸ்ணராஜா அவர்களும் கந்தரோடை அகழ்வு ஆய்வுகள் பற்றி ஆய்வுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இருநாடுகளிற்கு இடையிலான அரசுருவாக்கம், பண்டமாற்றுச் செய்தல் போன்ற பண்பாட்டுக் கலப்பு நடைபெற்றதை இவற்றினூடாகக் கண்டுகொள்ளலாம்.

## 9. முடிவுரை

இக்கல்வெட்டுக்களால் தமிழ் பண்பாட்டு மரபுகளை நாம் பெறக்கூடியதாக இருக்கின்றது. வழிபாட்டு மரபு இங்கு பேணப்பட்டு வந்துள்ளது. தானம் செய்வதைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. கோவிலுக்கு தானம் செய்கின்ற மரபு இங்கு பேணப்பட்டுள்ளது. சைவ சமயம் கிறிஸ்தவ சமயம் என்பவற்றின் பண்பாட்டு விழுமியங்களைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. மொழி வரலாறு , அரசியல் வரலாறு, இலக்கிய வரலாறு என்பவற்றுக்குத் தேவையான ஆதாரங்களைக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களுமே தருகின்றன. கல்வெட்டுக்கள் தரும் மொழிகளின் ஊடாகப் பண்பாட்டினை அறிய முடிகின்றது. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் சுபமஸ்து என்று தொடங்குவதைக் காணலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் அந்த மரபு மாற்றமுற்றுள்ளதைக் காணலாம். மொழிகளின் வளர்ச்சியினைக் கொண்டு காலத்தை உறுதி செய்யமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் பொதுவாக இலங்கையிலும் கூட எல்லா எழுத்துக்களும் தமிழ் வரிவடிவிலேதான் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இந்திய சாசனங்களில் கிரந்த எழுத்துக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது.

## உசாத்துணை நூல்கள்


[1] பத்மநாதன்.சி தொகுப்பாசிரியர், இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் II, பக் - 584, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், 2013.

[2] முத்துராச கவிராயர், கைலாயமாலை, 1939, சாந்தி அச்சகம், சென்னை.

[3] மயில்வாகனப்புலவர், யாழ்ப்பாண வைபவமாலை, 1949,ஈழகேசரி பதிப்பு, யாழ்ப்பாணம்.

[4] புஸ்பரட்ணம்.ப, கலைக்கேசரி தொகுதி 5, பக் - 22, கொழும்பு 2014.